**கவனிக்க.**- *22.11.2024 ஆந் திகதிய 2412 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *(தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2413 - 2024 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2024.11.29

*2413 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | 3400 | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 06 ஆந்திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


3399 - B82632 - 5,403(2024/11)

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2,412 ஆம் இலக்கமும் 2024.11.22 ஆம் திகதியும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட மேல்மாகாணத்தின் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 தரம் II ற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல் - 2024 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

1. 3 ஆம் பந்தியின் 3.1 கல்வித் தகைமை பிரிவில் iii இன் கீழ் வரும் 5 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

    - தாங்கள் விண்ணப்பிக்கும் பாடத்தை நீங்கள் பெற்றுக் கொண்டுள்ள கல்விமாணிப் பட்டத்தில் பயின்றுள்ளீர்கள் என்பதனை பல்கலைக்கழகத்தினால் உறுதிப்படுத்திய கடிதத்தையும் நீங்கள் ஆசிரிய பயிற்சியினை மேற்கொண்டுள்ளீர்கள் என்பதனை சான்றுபடுத்தும் கடிதத்தினையும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

2. உப அட்டவணை 02 பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

குறிப்பு - இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2,412 ஆம் இலக்கமும் 2024.11.22 ஆம் திகதியும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள "மேல்மாகாணத்தின் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விமாணிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 2 தரம் II ற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல் - 2024" என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் மாற்றமின்றி அவ்வாறே வலுவிலிருக்கும்.

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண அரசாங்கசேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்

மேல் மாகாண அரசாங்கசேவை ஆணைக்குழு,
இலக்கம்: 628, ஜன ஜய சிட்டி கட்டிடம், 10 ஆம் மாடி,
நாவல வீதி, இராஜகிரிய.
2024, நவெம்பர் 28.

**உப அட்டவணை 02**

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 01 | ஆரம்பக் கல்வி | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் தாய் மொழியினை பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 02 | ஆங்கில மொழி | உரிய பாடத்தினை க.பொ.த. (உயர் தர)த்தில் பாடமொன்றாக / பாடத்துறையாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் அல்லது உயர்தர பொது ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி அல்லது அதனிலும் உயர்ந்த சித்தியுடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை பயின்றிருத்தலும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தலும். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 03 | நடனம் (தேசியம்) | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக் கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 04 | சங்கீதம் (கீழேத்தேயம்) | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 05 | விஞ்ஞானம் | உரிய பாடத்தினை க.பொ.த (உ/தர)ப் பாடமொன்றாக /பாடத்துறையாக கொண்டு அதில் சித்தியடைந்திருத்தலும், கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 06 | கணிதம் | உரிய பாடத்தினை க.பொ.த (உ/தர)ப் பாடமொன்றாக /பாடத்துறையாக கொண்டு அதில் சித்தியடைந்திருத்தலும், கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 07 | சிங்கள மொழியும் இலக்கியமும் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 08 | தமிழ் மொழியும், இலக்கியமும் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 09 | வரலாறு | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 10 | பௌத்த சமயம் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமாக பௌத்த சமயம் / பௌத்த நாகரிகத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 11 | சைவநெறி | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமாக இந்து சமயம் / இந்து நாகரிகத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 12 | இஸ்லாம் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமாக இஸ்லாம் / இஸ்லாமிய நாகரிகத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 13 | கத்தோலிக்க திருமறை | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 14 | கிறிஸ்தவம் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 15 | புவியியல் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 16 | குடியுரிமைக் கல்வி | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக அரசியல் விஞ்ஞான பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 17 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 18 | முயற்சியாண்மைக் கல்வி | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 19 | ஹிந்தி | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 20 | அரபு | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 21 | சீன மொழி | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 22 | ஜேர்மன் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 23 | ஜப்பான் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 24 | பிரெஞ்சு | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 25 | கொரியன் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 26 | இரண்டாம்மொழி சிங்களம் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 27 | இரண்டாம்மொழி தமிழ் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 28 | சங்கீதம் (மேலேத்தேயம்) | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 29 | சங்கீதம் (கர்நாடகம்) | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 30 | சித்திரம் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 31 | நாட்டியம் (பரதம்) | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 32 | நாடகமும் அரங்கியலும் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 33 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 34 | விவசாயமும் உணவு தொழினுட்பவியலும் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 35 | நுட்பக்கலை | க.பொ.த. சாதாரண தரத்தில் நுட்பக்கலை பாடத்திற்கு A சித்தியினை பெற்றிருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தினை பூர்த்தி செய்திருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 36 | மனைப் பொருளியல் | க.பொ.த. சாதாரண தரத்தில் மனைப் பொருளியல் பாடத்திற்கு A சித்தியினை பெற்றிருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 37 | சுகாதாரமும் உடற் கல்வியும் | க.பொ.த சாதாரண தரத்தில் சுகாதாரமும் உடற் கல்வியும் பாடத்திற்கு A சித்தியினை பெற்றிருப்பதோடு கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல். அத்துடன் குறைந்த பட்சம் மாவட்டம் அல்லது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியிருத்தல். மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 38 | தொடர்பாலும் ஊடகக் கற்கையும் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக உரிய பாடத்தினை கற்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 39 | விசேடக் கல்வி | கல்விமாணிப் பட்டக்கற்கையில் விசேடக் கல்வியினை பாடமொன்றாக கற்றிருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 40 | மாணவர் ஆலோசனை | கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆலோசனை/உளவியலை பாடமொன்றாக கற்றிருத்தல் அல்லது ஆலோசனை தொடர்பான பட்டமேற் கல்வி டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல். |
| 41 | நூலக விஞ்ஞானம் | கல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றிருப்பதோடு கல்விமாணிப் பட்டக்கற்கையில் தாய் மொழியினை பிரதான பாடமாக அல்லது துணைப் பாடமொன்றாக கற்றிருத்தல் அல்லது கல்விமாணிப் பட்டத்துடன் நூலக விஞ்ஞானம் தொடர்பான ஒரு வருடத்திற்கும் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றினை பயின்றிருத்தல். அத்துடன் கல்விமாணிப் பட்டக்கற்கையில் ஆசிரிய பயிற்சியினைப் பெற்றிருத்தல் |

**விசேட குறிப்பு :**

1. நூலக விஞ்ஞானம் மற்றும் மாணவர் ஆலோசனை, விசேடக் கல்வி, நுட்பக்கலை, மனைப்பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும் தவிர்ந்த ஏனைய பாடங்கள் தொடர்பில் கல்விமாணிப் பட்டக்கற்கையின் பிரதான பாடத்தினை அல்லது துணைப் பாடத்தினை கருத்திற் கொள்ளும்போது கல்விமாணிப் பட்டத்திற்குரிய பொதுவான பாடங்களைத் தவிர்ந்த ஏனைய பாடங்களில் குறைந்த பட்சம் 1/3 பகுதி விண்ணப்பிக்கும் பாடத்துடன் தொடர்புடையதாயிருத்தல் வேண்டும்.

2. ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைத் தவிர ஏனைய பாடங்கள் தொடர்பில் கல்விமாணிப் பட்டக்கற்கையில் பிரதான பாடம் அல்லது துணைப்பாடம் குறைந்த பட்சம் 1/3 பகுதியினை முழுமைப்படுத்தாத சந்தர்ப்பத்தில், உரிய பாடத்தினை கல்விமாணிப் பட்டக்கற்கையில் பாடமொன்றாக கற்றிருப்பதோடு உரிய பாடத்தினை க.பொ.த (உயர்தர)ப் பாடமொன்றாக /பாடத்துறையாகக் கொண்டு திறமைச் சித்தியினை அல்லது அதனிலும் உயர்ந்த சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

11-384

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.